**தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 84.2 மில்லியன் கூட்டுமொத்தமான கட்டுநிதிகளை கோருவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 100.6 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரியால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த கட்டுநிதி ரூபா 81 மில்லியன் தொகையாகும். | கட்டுநிதி முறையாக திட்டமிடப்பட்டு முகாமை செய்யப்பட வேண்டும். | ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய கட்டுநிதி திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அனைத்து செலவினங்களும் திட்டமிடப்பட்ட அதே மாதத்தில் சமர்ப்பிக்கப்படாதமை மற்றும் கொடுப்பனவிற்காக விலைச்சிட்டைகள் சமர்ப்பிக்கப்படாதமை என்பன திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டிருந்தது. இதனால் அத்தகைய வேறுபாடுகள் அக் காரணங்களினால் ஏற்பட்டிருந்ததென மேலும் அறிவிக்கப்படுகின்றது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூலதன செலவினங்களிற்காக மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் நிதியேற்பாட்டை பயன்படுத்திய பின்னரான சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 55 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. | வருடாந்த மதிப்பீடுகள் யதார்த்தமாக தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்பார்க்கப்பட்டவாறு கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அலுவலக கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் அலுவலக உபகரணத்தை கொள்வனவு செய்தல் என்பன அவசியமற்றிருந்தன. |
| (ஆ) 02 செலவின விடயங்களிற்கு | -மேற்படி- | எதிர்பார்க்கப்பட்டதை விட |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட வருடாந்த நிதியேற்பாடுகளிற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் முறையே 105 சதவீதம் மற்றும் 145 சதவீதத்திற்கு சமமான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்தன. | | அதிகமாக திணைக்கள உத்தியோகத்தர்களிற்கான வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்கள் கிடைத்தமை மற்றும் உத்தியோகபூர்வ வாகனங்களிற்கு உரித்துடைய போதிலும் உத்தியோகத்தர்கள் அவர்களது தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவதை தெரிவுசெய்தமையால் அவர்களிற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துப் படிகளை செலுத்துவதற்காக மேலதிக நிதியேற்பாடுகள் பெறப்பட வேண்டியிருந்தன. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பொறுப்புக்கள் கூற்று மற்றும் 2018 ஆம் ஆண்டின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை ஒப்பிடும் போது 05 செலவின விடயங்கள் தொடர்பாக ரூபா 58,011 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அனைத்துப் பொறுப்புக்களையும் உள்ளடக்கி பதிவேடு பேணப்பட வேண்டும். | சுற்றறிக்கைக்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 தொழிற்பாடுகளை நிறைவேற்றத் தவறியமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர், கல்விசாரா பதவியணியினர் மற்றும் கல்விசார் உதவிச் சேவைகளிற்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களை அங்கீகரித்தல் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய திட்டங்கள் 2019 மே வரையிலும் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். | அது தொடர்பாக பரீட்சித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) நியதிச்சட்ட சபைகளின் | தெளிவுபடுத்தல் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியினர் மீளாய்வு அறிக்கைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக விபரங்கள் பேணப்பட வேண்டும். | |
| (இ) | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான பதவியணியை அங்கீகரிப்பதற்கு உரிய விதிமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணி அங்கீகாரத்திற்காக தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் முறையாக கோவைப்படுத்தப்பட்டு பேணப்பட வேண்டும். | அமைச்சரவையால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கை தீர்மானங்களின் அடிப்படையில் விதிமுறைகள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுவதன் காரணமாக விதிமுறைகளை தாமதமின்றி தயாரிக்க முடியாதிருந்தது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அடைந்துகொள்ளுதல் தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்த வேண்டிய போதிலும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தாமதமின்றி அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் உரிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |